# ஏசிடி ஃபைபர் நெட் சென்னையில் அறிமுகம்

சென்னை, ஆக.20:

பைபர்-டு-ஹோம் தொழில்நுட்பத்தின் முன்னோடியாகவும் மற்றும் கம்பியுள்ள பிராட்பேண்ட் வகையினத்தில், நாட்டின் நான்காவது மிகப் பெரிய இணைய சேவை வழங்குனராகவும் செயல்படும் ஆத்ரியா கன்வெர்ஜென்ஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், ஏசிடி ஃபைபர்நெட்-ஐ சென்னையில் அறிமுகம் செய்துள்ளது.

இப்புதிய பிராண்ட், நுகர்வோருக்கு வேகமான, அதிக நிலையான மற்றும் ஈடுஇணையற்ற இணைய அனுப வத்தை, ஆழ்ந்த அளவீனத்திற்குட் பட்ட மற்றும் எதிர்காலத்திற்கு ஏற்ற ஃபைபர் ஆப்டிக் இழைகள் தொழில் நுட்பத்தின் வழியாக வழங்கும் ஏசிடி-ன் உறுதிப்பாட்டினை மறு உறுதி செய்கிறது. சில்லறை பிரிவில் தற்பொழுது வழங்கப்பட்டுவரும் சேவைகளி லேயே மிக வேகமான 60 எம்பிபிஎஸ் திட்டங்களை அறிமுகம் செய்துள்ள தன் வழியாக, முன்னேற்றச் சிந்தனை மற்றும் முன்னோடித்துவ நிலையில் நீடித்தல் என்னும் தனது கருத்தாக்கத்தினை இந்நிறுவனம் மெய்ப்பித்துள்ளது.

ஏசிடி குழுமத்தின், குழும தலைமை செயல் அலுவலரான பாலா மல்லாடி கூறுகையில், 'இந்தியாவின் இணைய பயன்பாட்டினை முன்னெடுத்துச் செல்வதில், அதிகரித்து வரும் சந்தையின் அடிப்படையில் மட்டுமின்றி, ஆன்லைன் பயணர் வழக்கங் களை மாற்றியும் மற்றும் இந்த ஊடகத்தில் பயணர்களின் அனுபவத்தை மேம்படுத்தியும் ஏசிடி செயலாற்றுகிறது என்று கூறினார்.